**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : **திரு மா.சந்திரமோகன்., பி.ஏ., பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

திருவள்ளுவர் ஆண்டு 2056 விசுவாவசு வருடம் ஆவணி திங்கள் 18–ம் நாள்

2025–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 03–ம் நாள் புதன்கிழமை

*******

**இடைமனு எண். 3/2025– ல் அசல் வழக்கு எண் . 127/2021**

1. அருளரசன்
2. அன்பரசன்
3. தமிழரசி .....மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

**...எதிர்...**

1. கலையரசி
2. வீரமணி ......எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 22.08.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு L . மரியதாஸ் அவர்களும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு S.கார்த்திகேயன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரையைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்

**உத்தரவு**

அசல் வழக்கில் கடந்த 17.03.2022 அன்று மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து வழக்கை மேல்நடத்த உத்தரவாக வேண்டி மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் இம்மனு உ.வி.மு.ச.கட்டளை–9, விதி–7 மற்றும் பிரிவு– 151–ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.09.03 16:27:37 +0530

**<u>1. மனுவின் சுருக்கம்</u>**

(i) 2-ம் மனுதாரர் அசல் வழக்கில் 2-ம் பிரதிவாதி ஆவார். பிற மனுதாரர்களான 1 மற்றும் 3-ம் மனுதாரர்கள் அவரது சகோதரன் மற்றும் சகோதரி ஆவார்கள். அவர்களுக்காகவும் 2-ம் மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். மேற்படி வாதியால், மனுதாரர்கள் மீது விளம்பல் மற்றும் சுவாதீன மீட்பு பரிகாரம் கோரி வழக்கு தொடரப்பட்டிருந்தது. மேற்படி வழக்கின் விசாரணை கடந்த 17.03.2022 அன்று போடப்பட்டிருந்தது. இந்நிலையில் மனுதாரர்களது நெருங்கிய உறவினர் 17.03.2022 அன்று இறந்து விட்டார். அதனால் மனுதாரர்களால் நீதிமன்றத்தில் முன்னிலையாக முடியவில்லை. மேலும் வழக்கறிஞுரை சந்தித்து வழக்கின் விபரம் தெரிந்துக்கொள்ள முடியாமல் போய்விட்டது.

(ii) அசல் வழக்கில் 17.03.2022 அன்று மனுதாரர்கள் நீதிமன்றத்தில் முன்னிலை ஆகாத காரணத்தால் மனுதாரர்களுக்கு எதிராக நீதிமன்றம் மேற்படி வழக்கில் ஒருதலைபட்சமாக உத்தரவு பிறப்பித்துள்ளது. மனுதாரர்கள் வேண்டுமென்றோ, அலட்சியமாகவோ நீதிமன்றத்தில் முன்னிலை ஆகாமல் இல்லை. மேற்படி வழக்கில் மனுதாரர்களுக்கு நல்ல கட்சி உள்ளது. எனவே மனுதாரர்களுக்கு எதிராக கடந்த 17.03.2022 அன்று OS No: 127/2021-ல் ஒருதலைபட்சமாக பிறப்பிக்கப்பட்ட உத்தரவினை ரத்து செய்து உத்தரவிடக்கோரி மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவினை அனுமதிக்க வேண்டும்.

2. எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் இம்மனுவினை அதிகபட்ச செலவுத்தொகையுடன் அனுமதிக்கலாம் என்று மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

**<u>இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை</u>**

3. மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கதக்கதா?

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.09.03 16:27:43 +0530

4. இம்மனுவில் மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

**5. தீர்வு:**

**இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டது.**

(i) அசல் வழக்கானது மனுதாரர்கள் மீது எதிர்மனுதாரர்/வாதியால் விளம்பல் மற்றும் சுவாதீன மீட்பு பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் மனுதாரர்களுக்கு எதிராக கடந்த 17.03.2022 அன்று பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து வழக்கை மேல் நடத்த உத்தரவிடக்கோரி மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(ii) மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்களது நெருங்கிய உறவினர் 17.03.2022 அன்று இறந்து விட்டார் என்றும், அதனால் மனுதாரர்களால் நீதிமன்றத்தில் முன்னிலையாக முடியவில்லை என்றும், மேலும் வழக்கறிஞரை சந்தித்து வழக்கின் விபரம் தெரிந்துக்கொள்ள முடியாமல் போய்விட்டது என்றும் கூறப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் இம்மனுவினை அதிகபட்ச செலவுத்தொகையுடன் அனுமதிக்கலாம் என்று மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

(iii) மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் இம்மனுவுடன் அசல் வழக்கிற்கான எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதாலும், இது விசாரணை நீதிமன்றமாக இருப்பதாலும் தரப்பினர்களுக்கு போதுமான வாய்ப்பு கொடுத்து, இருதரப்பும் முழுவிசாரணை செய்து அதன் அடிப்படையில் முடிவு காண்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும். இருப்பினும் மனுதாரர்களால் நீதிமன்றத்தில் முன்னிலையாகாமல் போனதற்காக மனுவில் கூறியுள்ள காரணம் நியாயமானதாக இல்லை என்பதால், இம்மனுவினை கீழ்கண்ட நிபந்தனையுடன் அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.09.03 16:27:52 +0530

**இறுதியில்,** மனுதாரர்கள்/பிரதிவாதிகள், எதிர்மனுதாரர்/வாதிகளுக்கு செலவுத்தொகையாக ரூ.500/-ஐ (ரூபாய் ஐநூறு மட்டும்) 10.09.2025-ம் தேதிக்குள் கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. தவறும் பட்சத்தில் இம்மனு தானாகவே தள்ளுபடியாகிவிடும் என்றும் உத்தரவிடப்படுகிறது. அழைக்க 11.09.2025.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2025-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 03-ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.09.03 16:27:59 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

<u>பின் இணைப்பு</u>

| | |
|---|---|
| <u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்</u> | - இல்லை - |
| <u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u> | - இல்லை - |
| <u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்</u> | - இல்லை - |
| <u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u> | - இல்லை - |

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.09.03 16:28:04 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

**நேரிய/வரைவு உத்தரவு**
இடைமனு எண்.03/2025-ல்
அசல் வழக்கு எண்.127/2021
நாள்-03.09.2025.